பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கதிர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 05 செவ்வாய்க்கிழமை (16-02 1993) UTHAYAN— A Lively National Tamil Daily கதிர் 81



## அற்புதமான ஓர் இலட்சியவாதியாக வாழ்ந்து போராடிய மாவீரன் கிட்டு

### 31 ஆவது நினைவு நாளில் தலைவர் இதய அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 16

அற்புதமான ஓர் இலட்சியவாதியாக வாழ்ந்து போராடி மக்கள் இதயங்களைக் கவர்ந்த மாவீரன் கிட்டு.

— இவ்வாறு இதய அஞ்சலி செலுத்தியுள்ளார் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்.

தளபதி கேணல் கிட்டுவின் 31 ஆம் நாள் நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டதை ஒட்டி வெளியிடப்பட்ட நினைவு மலருக்கு வழங்கிய செய்தியிலேயே அவர் இவ்வாறு புகழாரம் சூட்டியிருக்கிறார். அந்தச் செய்தியில் தலைவர் தெரிவித்திருப்பதாவது:-

(6 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகளின் படகுகளைத்தேடி இந்தியக் கடற்படை ரோந்து

## சர்வதேசக் கடற்பரப்பில்!

கொழும்பு, பெப்ரவரி 16

விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்ற கப்பல்களைத் தேடி சர்வதேசக் கடற்பரப்பிலும் இந்தியக் கடற்படை ரோந்து சுற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சர்வதேசக் கடற்பரப்பில் அனைத்துப் படகுகளும் சென்று வருவதற்கு உரிமை உண்டு என்ற சர்வதேச நடைமுறையை மீறி, இந்தியா நடந்து கொள்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது தெரிந்ததே.

மூத்த தளபதி கேணல் கிட்டு வும் மற்றும் ஒன்பது போராளிகளும் வந்த கப்பலை சர்வதேச சட்ட விதிகளை மீறி, சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்குக்கு வந்த பொருள்கள் சிங்களவர், முஸ்லிம்களுக்கு மட்டும்

ஐ. நா. உணவு விவசாய ஸ்தாபனம் வடக்கு கிழக்கு மக்களுக்கு அனுப்பிய உணவுப்பொருள்களை ஸ்ரீலங்கா அரசு சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மட்டுமே வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மக்களுக்கென ஐயாயிரம் மெற்றிக் தொன் அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மேற்படி ஸ்தாபனத்தால் இலங்கை அரசிடம் வழங்கப்பட்டன.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் இருந்து இந்த உதவியை வழங்க அந்த ஸ்தாபனம் இணங்கியிருந்தது.

இந்த ஏற்பாடு நடைமுறைக்கு வந்து 6 மாத காலம் முடிவடைந்துள்ளது. ஆனால் ஐ. நா. உலக உணவுத் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கு பகுதியில் உள்ள அகதிமுகாம்களுக்கு இந்த உதவி வழங்கப்படவில்லை.

இந்த உதவித் திட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்கள் கொழும்பு, அனுராதபுரம் புத்தளம். மாத்தறை, குருநாகல், பொலநறுவை ஆகிய மாவட்டமக்களுக்குகே வழங்கப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது, இந்த மாவட்டங்களில் உள்ள அகதிமுகாம்களில் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களே தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## அரிசி, மா, சீனி, ம.எண்ணெய் குமாரியில் நாளை வரும்

யாழ்ப்பாணம், பெப். 16

ஆயிரத்து 400 மெற்றிக் தொன் அரிசி மற்றும் அத்தியாவசிய பொருள்களுடன் கொழும்பில் இருந்து புறப்பட்ட 'குமாரி' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயிரத்து 100 மெற்றிக் தொன் மா. 400 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, 10 மெற்றிக் தொன் சவர்க்காரம், 135 பரல் மண்எண்ணெய், 100 மெற்றிக் தொன் அமோனியம் சல்பேற், 100 மெற்றிக் தொன் ரி. டி. எம் உரம் மற்றும் தபால் பொதிகள் இக்கப்பலில் எடுத்துவரப்படுவதாக நேற்று யாழ். செயலகத்துக்குத் தகவல் கிடைத்துள்ளது. (உ-5)

## வவுனியாவில் ஹமில்டன்

கொழும்பு, பெப். 16

கூட்டுப்படைகள் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று முன்தினம் வவுனியாவுக்குத் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு, 'கறுப்பு நரி' இராணுவ நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்றிய பகுதிகளைப் பார்வையிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## செஞ். அதிகாரி இன்று வருகை

யாழ்ப்பாணம், பெப். 16

கொழும்பிலிருந்து கப்பல் மூலமும், காங்கேசனிலிருந்து வாகன அணி மூலமும் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துவரும் சேவைக்குப் பொறுப்பான செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி திரு. லோக் இன்று யாழ் வருகிறார்.

கப்பல் மூலம் பொருள்களை எடுத்து வருவதில் உள்ள பிரச்சினைகள் குறித்தும்—

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து மேற்கொண்டுவரும் திட்டங்கள் குறித்தும் அவர் இங்கு ஆராய்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ 3)

## சில்லாலையில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 16

மாதகல் இராணுவமுகாமில் இருந்து நேற்றுக் காலை 5. 30 மணிக்கு சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

## துப்பாக்கி பிரயோகம்

யாழ்ப்பாணம், பெப். 16

பூநகரி - கல்முனைப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்றுக் காலை ஆறு மணியளவில் அரியாலை பூம்புகார் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (அ-17)

## தினசரி ஷெல் தாக்கு

தென்மராட்சி, செப். 16

இயக்கச்சி முகாமிலிருந்து கடந்த நான்கு, ஐந்து நாட்களாக தினசரி இரவு எட்டு மணிக்குமேல் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக ஆட்லறி ஷெல்கள் ஏவப்படுகின்றன

இதனால் பளை, முகமாலை எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் இரவு எட்டு மணியாகியதும் பாதுகாப்பான இடங்களில் தங்குகின்றனர்

(உ-117)

## ஆங்கில ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புப் பரீட்சை

### மார்ச் 6 ஆம் திகதி நடக்கும்

யாழ்ப்பாணம், பெப் 16

மாவட்ட ஆசிரியர் சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில உதவி ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் யாழ். கல்வி அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த பரீட்சார்த்திகளுக்கு யாழ்ப்பாணத்தில் 10 பரீட்சை நிலையங்களில் மேற்படி பரீட்சை நடத்தப்படும் என்றும் —

பரீட்சை வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் என்பன இங்கு விரைவில் வந்துசேரும் என்றும் [illegible] வட்டாரங்கள் தெரிவித்தன.

அ. தி. மு. கவுடனான

## கூட்டணி நிலை குறித்து நரசிம்மராவுக்கு விளக்கம்

புதுடில்லி, பெப். 16

தமிழக அரசியல் நிலைவரம் குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தியும் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும் பிரதமர் பி. வி. நரசிம்மராவை நேற்று சந்தித்து தங்களின் மதிப்பீட்டைத் தெரிவித்தனர்.

அ.தி.மு.க.—இந்திரா காங்கிரஸ் கூட்டணியின் தற்போதைய நிலைவரம் பற்றியே இந்த மதிப்பீட்டில் பிரதானமாகக் கூறப்பட்டிருந்தது.

இத்தகவலை இந்திரா காங்கிரஸ் பேச்சாளர் சந்துலால் சந்திராகர் நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில்—

காங்கிரஸ் — அ. தி. மு. க. கூட்டணி தொடரும் என்றும் அவர் சொன்னார்.

## ஜெயலலிதாவினால் கூட்டணி முறிவு

## தமிழகத்தில் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிப்பு

### இந்திய ஐக்கிய கம்யூ. அறிவிப்பு

சென்னை, பெப். 16

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகமாகியுள்ளன.

- அ.தி மு.கவின் தோழமைக் கட்சிகளில் ஒன்றான இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி முன்கண்டவாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பது தேசிய அளவில் கவலை தருவதாக உள்ளதாக இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. மொஹித் சென் தெரிவித்தார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அபிவிருத்திசபை திட்டத்தை உடன் கைவிடுக!

### கொழும்பில் மறியற் போர்

கொழும்பு, பெப். 16

இலவசக் கல்வியைப் பாதிக்கும் வகையில் கொண்டு வரப்படும் — பாடசாலை அபிவிருத்திச் சபைகளை அமைக்கும் திட்டத்தை — உடனடியாகக் கைவிடக் கோரி நேற்று கொழும்பு கண் ஆஸ்பத்திரிச் சந்தியில் பெரும் மறியல் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

அரசியல் கட்சிகள், மாணவர் அணிகள் உட்பட 31 அமைப்புகள் இந்த மறியற் போராட்டத்தில் பங்குபற்றின.

உலக வங்கியின் சிபாரிசுக்கு அமையவே பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அமைக்கும் திட்டம் கொண்டு வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி நடவடிக்கைகளுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகைகள் மீது அடக்குமுறை

## சர்வதேச ரீதியிலும் அரசுக்கு எதிராகப் பிரசாரம்

கொழும்பு, பெப். 16

சுயாதீனப் பத்திரிகைகளுக்கு எதிராக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை ஆட்சேபித்து, அரசுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்வதற்கு எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன.

பத்திரிகைகளுக்கு எதிராக அரசு கடைப்பிடித்து வரும் அடக்குமுறைகளை ஆட்சேபித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் ஒன்று கூடி ஆராய்ந்ததாகவும் —

அந்தக் கூட்டத்திலேயே சர்வதேச ரீதியில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டு
# வினாவிடைப் போட்டி-1993

யாழ். மறைவட்ட கத்தோலிக்க மாணவர்களுக்கான மேற்படி போட்டி மே 15இல் நடைபெறும். போட்டிக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் மார்ச் 31ஆம் திகதியாகும்.

போட்டி மூன்று பிரிவுகளாக இடம் பெறும்:

கீழ்ப்பிரிவு — ஆண்டு 5,6,7 வினா-விடை ரூ 5/-
மத்திய பிரிவு — ஆண்டு 8 9,10 வினா-விடை ரூ 6/-
மேற் பிரிவு: — ஆண்டு 11,12,13 வினா-விடை ரூ 7/-

மேலதிக விவரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

அருள்திரு ஜே. நீக்கிலஸ்,
திருவழிபாட்டு நிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
(24471)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
# மகளிர் அபிவிருத்தி நிலையம்
## யாழ் கல்வித் திணைக்கள
மனைப்பொருளியற் பிரிவினருடன்
இணைந்து நடத்தும்
# போட்டி

**விடயம்:-**
உள்ளூர் உணவுப் பொருள்களிலிருந்து சிறந்த புதிய உணவு வகைகள் தயாரித்தல்.

**விதிமுறைகள்:-**
தயாரிக்கப்படும் உணவு,
1. உள்ளூர் பொருள்களை கொண்டதாகவும்,
2. போசாக்கானதாகவும், அமைதல் வேண்டும்.

**உணவு வகைகள்:-**
விருந்தினர் உபசாரத்திற்குரியவை,
சாதாரண மக்கள் பாவனைக்குரியவை,
குழந்தைகள், முதியோர்கள், நோயாளர்க்குரியவை,
விற்பனைக்குரியவை என்ற தரத்தில் அமையலாம்.

**பங்குபற்றுநர்:-**
பாடசாலை மாணவர்கள், மகளிர் குழுக்கள், தனியார், நிறுவனங்கள், தனிநபர், போட்டியில் ஆண்களும் பெண்களும் விண்ணப்பிக்கலாம். ஒருவர்/குழு எத்தனை வகை உணவுகளையும் தயாரிக்கலாம்.

பங்குபற்றுபவர் **20-02-93**க்கு முன்னதாக விண்ணப்பிக்குக.

தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் 93 மார்ச் மாதம் 7 ஆம் திகதி (07-03-93) பார்வைக்கு வைக்கப்படும். சிறந்தவையென தெரிவு செய்யப்படும் உணவு வகைகட்கு தகுந்த பரிசில்கள் வழங்கப்படும்.
(இடம் பின்னர் அறிவிக்கப்படும்)

இயக்குநர்
மகளிர் அபிவிருத்தி நிலையம்,
07, சயந்தசிறி வீதி (இரத்தினம் ஒழுங்கை),
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(24472)

வட-கிழக்கில்
# சர்வோதய நடவடிக்கையை நிறுத்தினால் பாரிய பாதிப்பு
## பிராந்திய இயக்குநர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 16 வட கிழக்கில் சர்வோதய இயக்கத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டால் பாரிய பாதிப்புகள் ஏற்படும் என்று இந்த இயக்கத்தின் வடபிராந்திய இயக்குனர் திரு. கி. சிவசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இதனால் சர்வோதய இயக்கத்தில் பணிபுரியும் 450 நிரந்தர ஊழியர்களும், 1,600 பகுதி நேர ஊழியர்களும் தொழில் வாய்ப்பை இழப்பார்கள் எனவும் வடக்கில் சர்வோதயத்தின் பராமரிப்பில் இருக்கும் 31 முகாம்களில் உள்ள 820 குடும்பங்கள் பாதிப்படையும் எனவும் அவர் கூறினார்.

மேலும், 142 பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும்
(6 ஆம் பக்கம் பார்க்க)

# தவறிவிட்டது

13 02 1993 அன்று சித்ராலயா ஸ்ரூடியோவிற்கும், நல்லூர் கோவில் வீதிக்கும் இடையில் (Gold Frame) கொண்ட இரண்டு வில்லை கொண்ட மூக்குக் கண்ணாடி (Reading Glass) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சித்ராலயா ஸ்ரூடியோவில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**- சித்ராலயா ஸ்ரூடியோ.**
[6004]

## வலி - வடக்கு செ. சி. சங்கம்
நடாத்திய
# அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள்

1 ஆம் பரிசு — **0036**
2 ஆம் பரிசு — **2809**
(இப் பரிசு களவோடை சின்னம்மன் கோவிலினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.)
3 ஆம் பரிசு — **4227**
(இப் பரிசு தெல்லிப்பளை துர்க்கா தேவஸ்தானத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.)
4 ஆம் பரிசு — **3266**
(இப் பரிசு யாழ். செஞ்சிலுவைச் சங்க போஷகரும், வலி. வடக்குப் பிரிவு செ. சி. சங்க போஷகருமான திரு சு. பரமநாதனால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.)
5 ஆம் பரிசு — **0848**
(இப் பரிசு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் திரு. சு. சிறீ பாஸ்கரனால் வழங்கப்பட்டது.)

அதிஷ்டசாலிகள் எதிர்வரும் 21 2-93 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு எமது காரியாலயத்தில் நடைபெறும் வைபவத்தில் பெற்றுக்கொள்ளவும்.

ஆலை ஒழுங்கை,
மல்லாகம்.
(5820)

கௌரவ செயலாளர்
இ. செ. ச. வலி வடக்குப்பிரிவு

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம். பெப். 16 யாழ் நகர் தெற்கு கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் பங்குபற்றும் உடற்பயிற்சிப் போட்டிகள் யா/ புனிதர் ஜோசப் ஆண்கள் வித்தியாலயத்தில் நளை புதன்கிழமை காலை, யாழ் நகர் தெற்கு கொத்தணி அதிபர் திருமதி பி. எப். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.
(த-எ)

o o o

யாழ். பல்கலைக்கழக தமிழ் துறையினர் ஏற்பாடு செய்துள்ள ''ஈழத்து நாட்டார் கூத்து இலக்கியங்களும், காத்தவராயன் கூத்து இலக்கியமும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு, நாளை பிற்பகல் 2.30மணிக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெறும். கருத்தரங்கிற்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகிப்பார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. அருந்தவநாதன் கருத்துரை வழங்குவார்.
(த)

o o o

யாழ்ப்பாணம், பெப். 16 ''நல்லூர் பிரதேசத்துக்கான ஆயுள்வேத பாதுகாப்புச் சபை அமைப்புக் கூட்டம் நாளை பிற்பகல் 2 00 மணிக்கு நல்லூர் பிரதேசச் செயலகத்தில் நடைபெறும். நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் வசிக்கும் சகல ஆயுள்வேத வைத்தியர்களையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேசச் செயலர் திரு. ஆ. மகாலிங்கம் கோரியுள்ளார்.
(உ)

o o o

யாழ்ப்பாணம், பெப். 16 இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழா நாளை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு யாழ். கல்விக் கோட்டத்தினர் ஒழுங்கு செய்துள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் பதில் பொறுப்பாளர் செல்வி சுகுணா, யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பதில் பொறுப்பாளர் திரு. சோ. தங்கன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவர்.
(க)

o o o

யாழ்ப்பாணம், பெப். 16 இந்து மாணவர்கள் ஆர்வலர்களுக்கான விசேட கருத்துரை நிகழ்வு நாளையும், எதிர்வரும் 24 ஆம் திகதியும் இரு தினங்கள் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ''யாழ்ப்பாண நோக்கில் எங்கள் இந்து சமயம்'' என்ற தலைப்பில் — பரமேஸ்வரக் கல்லூரி இயக்குநர் சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் கருத்துரை வழங்குவார்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா தலைமையுரையும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இந்து நாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலக்கிருஷ்ணன் ஆகியோர் அறிமுக உரைகளும் நிகழ்த்துவர்.
(உ-45)

# அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்
(வரைவுள்ளது)
## பங்குப்பணம் ரூபா 100/- செலுத்தி அங்கத்தவராவதற்கு
## முடிவுத் திகதி 05-03-1993

5-3-93 திகதிக்கு முன் ரூபா 100/- பங்குப் பணம் செலுத்தி அங்கத்துவம் பெறாத—

★ கிளைக்குழு உறுப்பினர்கள், கிளைக்குழு உறுப்பினர் பதவியை இழக்க நேரிடும்.

★ பொதுச்சபைப் பிரதிநிதிகள்; பொதுச்சபைக் கூட்டங்களில் பங்குபற்ற இயலாது.

★ 30-9-93 காலாண்டில் முடிவடையும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற இயலாது.

★ 30-9-93 வாக்காளர் பட்டியலில் இடம்பெறாதவர்கள் கிளைக்குழுத் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ இயலாது.

எனவே சங்கத்தில் ஏற்கனவே அங்கத்தவர்ளகாக உள்ளவர்கள், தங்கள் பங்குப்பணத்தை ரூபா 100/- ஆக அதிகரிக்கவும், அங்கத்தவர்கள் ஆவதற்கும் இறுதிச் சந்தர்ப்பம் 5-3-93 ஆகும்.

5-3-93க்கு முன்னர் சகல கிளைகளிலும், நிவாரணக்கிளைகளிலும் பங்குப்பணத்தைச் செலுத்தவும், அங்கத்தவர் விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கவும், ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இறந்த அங்கத்தவர்களின் பின்உரித்தாளர்கள் தங்களது பெயரில் பங்கினைமாற்ற சங்கக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வாக்காளர் பட்டியல்களை பங்குப் பணவிவரங்களையும் பின்வரும் கிளைகளிலும், காரியாலயத்திலும் பார்வையிடலாம்.

1. கிளை **1** (இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடி) கிளை 1, 5, 6
2. கிளை **2** (சிரணிச்சந்தி - சண்டிலிப்பாய்) கிளை 2, 4
3. கிளை **3** (மருதனாமடம் - புகையிரத நிலையத்தடி) கிளை 3,
4. கிளை **7** (அளவெட்டி தெற்கு)
5. கிளைகள் 8, 9, 10, 11, 12 என்பன அக்கிளைகளில்.

ப. கனகரத்தினம்.
தலைவர்

வே. தர்மராஜா.
செயலாளர்
(சி/4534)

# இரண்டாம் ஆண்டு நினைவுகள்



**திருமதி சிவபாக்கியம் சிவபாதசுந்தரம்**
தோற்றம் : 27 - 03 - 1935
மறைவு : 12 - 03 - 1991



**அமரர் நல்லதுரை ஸ்ரீபத்மநாதன்**
தோற்றம் : 25 - 03 - 1956
மறைவு : 12 - 03 - 1991



**திருமதி மாலினி ஸ்ரீபத்மநாதன்**
தோற்றம் : 09 - 10 - 1957
மறைவு : 12 - 03 - 1991

திதி : 16 02 - 1993

சகோதர, சகோதரி குடும்பத்தினர், உற்றார், உறவினர் மற்றெல்லோர் நல்வாழ்விற்கும் துணை புரிந்து, நற்பெயர் பெற்று வாழ்ந்து மூவரும் ஒன்றாகவே இவ்வுலகை விட்டு மறைந்தும் மறவா அமரஜோதிகளாகி விட்ட உங்கள் புனித ஆத்மாக்கள் சாந்தி அடையக் காலமெல்லாம் இறைவனை வேண்டுகின்றோம்.

பொன்னம்பலம் லேன்,
உடுவில் றோட்,
மானிப்பாய்.

நா. சிவபாதசுந்தரம்
ந. வரதராஜா குடும்பத்தினர்.
(24474)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 மடங்கு வீடமைப்புக்கடன் யாழ்.மாநகரசபை வழங்கும்

வண்ணார்பண்ணை, பெப் 16

கடந்த வருடத்தை விட இவ்வருடம் இரண்டு மடங்கு வீடமைப்பு மானியக் கடனை வழங்க யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் மாநகரசபை இதனை வழங்கும்.

கடந்த வருடம் இதற்கென மாநகரசபையினால் 3 லட்சத்து 51 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டது. மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 31 பேருக்கும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 14 பேருக்கும் இம்மானியம் வழங்கப்பட்டது.

இக் கடனைப் பெற்று, தவணைப் பணத்தை மீளச் செலுத்த முடியாதவர்களில் ஒரு தொகுதியினருக்கு அவர்களின் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்ய கடனுக்குப் பதில் நிவாரணம் வழங்கவும் இத்திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறிய, எவ்வித ஆதரவும் அற்றவர்கள் என்று இனங்காணப்பட்ட குடும்பங்களுக்கும், வீடு கட்டுவதில் போதிய ஆர்வமும், ஈடுபாடும் காட்டுபவர்களுக்குமே இந்த நிவாரணம் பெற முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்படும் குடும்பங்களுக்கு ரூபா 5 ஆயிரம் முதல் ரூபா 8 ஆயிரத்து 500 வரை கடன் வழங்கப்படும்.

(த-162)

## நவாலியில் நாய்களுக்கு தடுப்பூசி

மானிப்பாய், பெப். 16

நவாலி, ஆனைக்கோட்டை பகுதிகளில் இன்றும் நாளையும் நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படும்.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8-30 மணிக்கு நவாலி சென் பீற்றேஸ் தேவாலயத்துக்கு அருகாமையிலும், காலை 10-00 மணிக்கு நவாலி வடக்கு சனசமூக நிலையத்திலும், நண்பகல் 12 மணிக்கு வளர்மதி சனசமூக நிலையத்திலும் –

நாளை புதன்கிழமை காலை 8–30 மணிக்கு ஆனைக்கோட்டை கிராமசபை அலுவலகத்திலும், காலை 10 மணிக்கு ஆனைக்கோட்டை 3ஆம் கட்டை கலை ஒளி சனசமூக நிலையத்திலும், நண்பகல் 12மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தடியிலும் —

நாய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்படுகிறது (க-90)

## முன்னறிவிப்பின்றி வேலை நீக்கம்!

பளை அஞ்சல் அலுவலகத்திலும் இயக்கச்சி, எழுதுமட்டுவாள் சோரன்பற்று உப அஞ்சல் அலுவலகங்களிலும் கடமையாற்றிய 15 பதில் தபால் ஊழியர்கள் முன்னறிவித்தல் எதுவுமின்றி கடந்த வியாழக்கிழமை முதல் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(த-117)

## பொது அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். பாரதி இளைஞர் அறிவியற் கழகக் கல்விப் பிரிவு நடத்திய பொது அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து, ஆயிரக்கணக்கான மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றினர். வெற்றிபெற்றோருக்கான பரிசுகள் மிக விரைவில் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## விசேட அ. அட்டை

மட்டக்களப்பில் டியூட்டரிகளில் கல்வி பயிலும் மாணவருக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பான உயர்நிலை மாநாடு ஒன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பில நடைபெற்றது. (த-எ)


## இளங்கலைஞர் மன்றத்தின் 13ஆவது இசை விழா

இடம்: மன்றக் கலா மண்டபம்,
சட்டநாதர் வீதி, நல்லூர்.

8ஆம் நாள் **16-02-93** செவ்வாய்

வண். மேற்கு வைத்தியசாலை
ஆதரவில்

மாலை 4-00 — 5-00 மங்கள இசை

| நாதஸ்வரம்: | தவில்: |
|---|---|
| ரி. சத்தியநாதன் | எஸ். பரந்தாமன் |
| ரி. செல்வநாதன் | எஸ். கண்ணன் |
| எஸ். கலியமூர்த்தி | எம். நாகேந்திரன் |
| கே. ராமதாஸ் | ரி. யோகநாதன் |

5-00 — 5-10 மிருதங்க இசை
அண்ணாமலை இசை மன்ற மாணவர்கள்

5-10 — 5-30 பாட்டு
சுவர்ணலக்ஷ்மி, விஜிதா, ஸ்ரீதேவி, சிவானுஜா, சறோஜினி.
வயலின் — சுபத்திரா கணேசன்
மிருதங்கம் — எஸ். கமலதாஸன்

5 30 — 6-00 பாட்டு எஸ். குலசிங்கம்
வயலின் — எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் — சதா வேல்மாறன்

6-00 — 6-45 இரு வயலினிசை
ஆர். எஸ். கேசவமூர்த்தி, எஸ். சுகன்யா
மிருதங்கம் — கே கண்ணதாசன்
கடம் — சதா வேல்மாறன்

6-45 — 7-00 மங்கள விளக்கேற்றல்
திரு. முத்துகணேஸ் (வர்த்தகர்)
திரு. வி. சக்திவேல் (ஐயப்பன் புடைவை மாளிகை)
திரு. ராகுலசூரியன்ஸ் (வர்த்தகர்)

தலைவர்: திரு. பி கனகசபாபதி (முன்னாள் தலைவர், நல்லூர் ப நோ. கூ. சங்கம்)

சிறப்பு விருந்தினர்: டாக்டர் ஆர். தெய்வேந்திரன் (சுகாதார வைத்தியர், யாழ். மாநகரசபை)

7-00 — 8-00 இசைக் கச்சேரி
பாட்டு — கே ராமநாதன்
வயலின் — எஸ். சர்வேஸ்வரசர்மா
மிருதங்கம் — எஸ். மகேந்திரன்

8-00 — 9-00 கெஞ்சிற் கச்சேரி
நாதஸ்வரம் — எஸ். எஸ் சிதம்பரநாதன்
வயலின் — ஆர். எஸ் கேசவமூர்த்தி
மிருதங்கம் — கே கண்ணதாஸன்
கெஞ்சிரா — எஸ் நாகராஜன்
கடம் — சதா வேல்மாறன்

9-00 — 10-00 நாடகம்
கலைமகள் நாடகசபாவின்
"இந்தமண் எங்களின் சொந்தமண் புகழ்"
ஜி, சாந்தன், நடிகஜோதி செல்வம்
ஆகியோர் வழங்கும்
★ மயான காண்டம் ★
சரித்திர நாடகம்

வாழ்த்துபவர்:
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்,
திருநெல்வேலிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-[illegible])



SCIENCE ACCADAMY
NALLUR.

O/L கணிதம்
வினா - விடை
வகுப்பு
செவ். - வியா. 5-15

ஆசிரியர்:
ல. சதீஸ்

ஆரம்பம்:
18—02—1993
5-15 p. m.

([illegible])



## வைத்திய சேவை

உடல் பருமனா? உடல் மெலிவா? வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? மாதவிடாய் கோளாறுகளா? குழந்தைகளின் பீடையா? சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் கிடைக்கும்.

டாக்டர் த. சிவானந்தன்,
"சிவா வைத்தியசாலை"
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.

தினமும் } காலை 8-30 முதல் 12-30 வரை
பிற்பகல் 3-00 முதல் 6-00 வரை

(24468)



யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்

## தேவை

1. எழுதுவினைஞர்
2. சுருக்கெழுத்தாளர் (தமிழ்)

தகைமைகள்:
க. பொ த. சாதாரணதர பரீட்சையில் 5 பாடங்களில் விசேட சித்தி.
அல்லது
க. பொ. த. உயர்தர பரீட்சையில் சித்தி.

வயது: 40 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல்.

செயல் திறமையுடன் சிறப்பாகவும் விசுவாசமாகவும் கடமையாற்றக் கூடிய விண்ணப்பதாரருக்கு நல்ல தொழில் முன்னேற்ற வாய்ப்புக்கள் உண்டு.

சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

சிபாரிசு செய்யக் கூடிய உறவினரல்லாத இருவரின் பெயர், விவரங்களைக் குறிப்பிட்டு சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பங்களை 21-02-93 பிற்பகல் 4மணிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

ந. பாலவினாயகர்,
செயலாளர்.

தலைவர்,
யாழ் மாவட்ட பேக்கரி-
உரிமையாளர் சங்கம்,
மணியம்ஸ் கட்டடம்,
யாழ்ப்பாணம். (24465)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் தம்பையா பசுபதி

தோற்றம்: 03 — 01 — 1933
மறைவு: 10 — 03 — 1991

திதி: அபரபக்க ஏகாதசி 16 - 02 - 1993

பாசமாய் எம்மைப் பரிவுடன் வளர்த்து, கல்வி நேயமாய் ஊட்டி வாழ்வின் நெறிகளும் வகுத்துக் காட்டி, ஆசையாய் அணைத்துக் காத்த தந்தையே! நல்வழிகாட்டி அறவழியில் போக வைத்த அன்புத் தெய்வமே! நீங்கள் இன்றில்லாவிடினும் உங்கள் நினைவுகள் என்றென்றும் நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(24456)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

அடை வைப்பதற்கு உகந்த பன்ரம், பாபடிக்ஸ், காப்பிலி பன்ரம், சிலம்பு பன்ரம், முட்டைகளும், பன்ரம், காப்பிலிக் குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு; பிளான்ட் பரடைஸ், இல. 152/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (24463)

**தேவை**

பேக்கரி வேலைக்கு ஆட்கள் தேவை. பிஸ்கட் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். நியூ துர்க்கா பேக்கரி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி. (24427)

**இலவச திருமண சேவை**

38 வயது, திருவாதிரை, U. K.இல் தொழில்புரிபவருக்கு மணபெண் U. K.இல் தேவை. அனுப்பக்கூடியவர்களும் விண்ணப்பிக்கலாம். மணமக்கள் உண்டு. நாடுங்கள்: ஞாயிறு காலையில். விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (24457)

## திருவடிநிலை கடற்பரப்பில் கடற்படைக் கப்பல்

திருவடிநிலை கடற்பரப்பில் கடந்த வெள்ளி முதல் ஸ்ரீலங்கா கடற்படைக் கப்பல் ஒன்று நங்கூரமிட்டுள்ளது. தொலை தூரத்தில் தரித்து நிற்கும் கப்பலுக்குப் பாதுகாப்பாக பீரங்கிப் படகுகள் ரோந்து சுற்றி வருகின்றன.

இதனால் மீனவர்கள் கடலுக்குப் போகத் தயங்குகின்றனர். (ஒ-28)

## வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கிக் கிளைகளில் 70 வெற்றிடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ் வெற்றிடங்களுக்குத் தற்போது புதிதாக 16 பேர் நியமனம் பெற்றுள்ளபோதிலும் மிகுதி வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதால் வங்கி வேலைகள் தாமதப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்கும்

கொழும்பு, பெப் 16

சர்வோதய இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 39 முறைகேடுகள் குறித்து, அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிக்கவிருக்கிறது. (த-எ)

## கைதானார்

சென்னை, பெப் 16

இராமேஸ்வரம தொலைக்காட்சிக் கோபுரத்தை தகர்க்க சதி செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் அந்த நகரத்தின் திரையரங்கு உரிமையாளர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

அந்த நபரிடம் இருந்து சில ஜெலற்றீன் குச்சிகளும், வெடிக்க வைக்கும் சாதனங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## பேடன் பவல் தினம்

சாரணிய தந்தை பேடன் பவல் தினம் எதிர்வரும் 22 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது இத் தினத்துக்கு முன்னர் இயன்றளவு சாரணர்களையும், குருளைச் சாரணர்களையும் சேர்த்து புதிய குழுக்களை ஆரம்பித்து சாரண அபிவிருத்தியை மேற்கொள்ளுமாறு சாரணர் மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் கேட்டுள்ளார். (க-152)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
25 - 04 - 1928

ஆண்டவன் அணைப்பில்:
16 - 02 - 1992



திதி:
05 - 03 - 1993

## அமரர் கந்தையா கனகலிங்கம்

(வேலணை - வடக்கு)

(E. கைலாசபிள்ளை அன்கோ உரிமையாளரும், காலி ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும்)

தாய்க்குத் தலைமகனாய் சகோதரர் இருவருடன்
பூமியில் ஜனித்து புகழ் சேர்த்த உத்தமனே!
மனையாள் சிறப்புடனே மக்கள் ஐவருடன்
இனிய இல்லறத்தை இறைவன் பொறுக்கவில்லை.

பெற்று வளர்த்தெடுத்து பேணி வளர்த்த தந்தை
கற்று நாம் நிமிர்கையிலே காணாமல் போனதெங்கே?
பற்றுடன் நாங்கள் இங்கு பரிதவித்து நிற்கின்றோம்
கொற்றவன் கழல்களுக்கு சொல்லாமல் சென்றதென்ன

பத்துவயது முதல் பாரங்கள் சுமந்திறக்கி
ஐபத்து ஆண்டுகளாய் ஆற்றிவிட்ட சேவைதனில்
வித்தகனாம் சிவனுக்கும் விரும்பியிடம் -
அமைத்ததனால்
பித்தன் தனக்கென்று பிள்ளையாய் எடுத்தானோ!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!

அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்.
ஆருயிர் சகோதரர்கள்.

கோண்டாவில் கிழக்கு. (24449)

# 8ஆவது பிறந்த ஆண்டு நினைவு நாள்



## செல்வன் பிறேமகீதன் ஸ்ரீரஞ்சன்

எங்களோடு: 16 — 02 — 1985
இறைவனோடு: 01 — 06 — 1989

உன் நினைவு உருண்டோடி எட்டாண்டு மறைந்தாலும், எம் நினைவு உனைவிட்டு உருண்டோடி மறையாது; இன்றைக்கும் நீ பிறந்து எங்கள் மடியிலே தவழ்வது போன்ற உணர்வில், உன் முகத்தைப் பார்த்து நாமும் ஆனந்தமாய் மகிழுகிறோம்.

என்றும் உன்னை மறவாத;
அப்பா, அம்மா,
அன்புத் தங்கை - திவ்யா,
அம்மப்பா, அம்மம்மா,
பாலா மாமா, சிலன் மாமா.

7ப, (புதிய இல. 109)
அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(5792)

உ
சிவமயம்

# சிவாச்சார்யாபிஷேக அழைப்பு

(குருப்பட்டமளித்தல்)

அன்புடையீர்!

சுவஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருஷம் மாசி மாதம் 07 ஆம் திகதி (18 - 02 - 1993) வியாழக்கிழமை காலை 7-59 மணிமுதல் 9-40 மணி வரையுள்ள உத்தராட நட்சத்திரமும், துவாதசி திதியும் கூடிய மீனலக்ன சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன்
சிரஞ்ஜீவி
**பிரம்மஸ்ரீ கு. சரவணபவசர்மா**
அவர்களுக்கு

சமய தீட்சை, விஷேஷ தீட்சை, நிர்வாண தீட்சையுடன்
**ஆசார்யாபிஷேகம்**
செய்து வைக்க திருவருள்மிகு அன்னை சிவகாமியின் திருவருள் கைகூடியுள்ளதால், மேற்படி முகூர்த்த வைபவத்தில் தாங்கள் இஷ்டமித்ர, குடும்ப சமேதராய்க் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

முகூர்த்த வைபவம்
**இணுவில்**
**திருவருள் மிகு சிவகாமியம்மன் ஆலய**
மண்டபத்தில் நடைபெறும்.

தீட்சாகுரு
**சிவாகமஞான பாஸ்கரன்**
**சிவஸ்ரீ தா. மஹாதேவக் குருக்கள்**
(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)

சுபமஸ்து

இங்ஙனம்:

சிவஸ்ரீ சாம்பசிவ-
சோமசபேசக்குருக்கள்-
பிரதம குரு,
(இணுவில சிவகாமியம்மன்-
கோவில்),
தம்பதிகள்.
10 - 02 - 1993

பிரம்மஸ்ரீ
சா. குமாரசாமிசர்மா-
தம்பதிகள்,
இணுவில் கிழக்கு,
இணுவில்,
சுன்னாகம்.

(24464)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## யாழ். பல்கலைக் கழக வெளியீடுகள்

யாழ். பல்கலைக்கழகம் தமிழர்களின் இராச்சியத்தின் வரலாற்றுஉண்மைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் ''யாழ்ப்பாண இராச்சியம்'' என்னும் ஆய்வு நூலை வெளியீடுசெய்துள்ளது. கி. பி. 13 ஆம்நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரைக்குமான வரலாறு இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பின்வரும் ஆய்வாளர்களின் கட்டுரைகளை கொண்டுள்ளது.

1. கலாநிதி சி. க. சிற்றம்பலம்
2. பேராசிரியர் வி. சிவசாமி
3. பேராசிரியர் சி. பத்மநாதன்
4. திருமதி சோ. கிருஷ்ணகுமார்
5. திரு. ப. புஸ்பரத்தினம்
6. திரு. செ, கிருஸ்ணராஜா

இந்நூலின் பதிப்பாசிரியர் கலாநிதி சி. க. சிற்றம்பலம்.

பிரதி ஒன்றின் விலை ரூபா 450/-
பதிவுத் தபால் செலவு ரூபா 32/-

புத்தகம் கிடைக்கும் இடம்:-

1. நிர்வாகக் கிளை,
யாழ். பல்கலைக்கழகம்,
2. உலக பல்கலைக்கழக சேவை
(W.U.S) அலுவலகம்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக் கழகம்.

இந்நூலைத் தபாற் கட்டளை / காசுக்கட்டளை ஆகியவற்றை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் பதிவுத் தபாற் செலவை மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளை / காசுக் கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ். பல்கலைக் கழகம்.

(சி-4529)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நேரத்தை வீணாக்கும் நீரோ மன்னர்கள்!

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதார நடவடிக்கைகள், பெறுபேறுகள் குறித்து ஆளுங்கட்சியும்பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வீணாக மோதிக்கொள்கின்றன; அலட்டிக் கொள்கின்றன.

பிரேமதாசாவின் பொது விவாத அழைப்பை ஏற்றுக் கொள்வது என்றால் அவர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி கட்சியின் தலைவர் என்ற முறையில் கலந்து கொள்ள வேண்டும் எனச் சிறிமாவோ நிபந்தனை விதித்திருக்கிறார். அது மட்டுமன்றி சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்கு இடைக்கால அரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

பொது விவாத விவகாரத்தையும் அது சம்பந்தமான தெற்கு அரசியல் தலைவர்களின் நிலைப்பாடுகளையும் பார்க்கும்போது அவர்களுக்குத் தேர்தலிலும் அதன் மூலம் அரச பதவியைப் பிடிப்பதிலுமே அதிக அக்கறை என்பது வெளிச்சமாகத் தெரிகிறது.

இந்த நாட்டின் மிக முக்கியமான, முதன்மையான பிரச்சினையாக உள்ள இனப்பிரச்சினை குறித்தும் அதனால் உருவாகியுள்ள யுத்த நிலைமை குறித்தும் கொள்ள வேண்டிய கவனத்தைவிட, தேர்தலிலும் பதவியிலுமே அவர்களுக்குக் கண்!

இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படாமல் யுத்தம் தொடர்வதால் தமிழ் மக்கள் மட்டுமே அவலப்படுகிறார்கள்; தமிழ் மக்களும், போராளிகளும் உயிரிழக்கிறார்கள் என்பதல்ல. யுத்தத்துக்காகக் கோடி கோடியாகப் பணம் செலவிடப்படுவதால் சிங்களவர்களின் பொருளாதாரம் தேய்கிறது. சிப்பாய்களாகப் பணிபுரிந்த பல சிங்கள இளைஞர்கள் மாண்டு போனதால் எத்தனையோ சிங்களக் குடும்பங்கள் நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளன.

இன்னும் ஆயிரம் ஆயிரம் சிங்கள இளைஞர்கள் கை இழந்து, கால் இழந்து அங்கவீனர்களாகியுள்ளார்கள். ஜனாதிபதி திறந்துவைக்கும் ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழாக்களில் ஊனமுற்ற முன்னாள் படை வீரர்களுக்கு முச்சக்கரவண்டிகளும் ஏனைய ஊன்றுகோல் போன்ற உபகரணங்களும் வழங்கப்படும் நிகழ்வுகள் அதனையே பிரதிபலிக்கின்றன.

எனினும் தமது சிங்கள மக்கள் மீது இருக்கும் அக்கறையைவிட, அரசியல் தலைவர்களுக்குத் தேர்தல் மீதும், பதவி மீதுமே அதீத ஆர்வம் இருக்கிறது என்பதைப் பொதுவிவாதத்தால் எழுந்துள்ள சர்ச்சை நிலை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. அல்லவா?

அவ்வாறிருக்க—

குண்டு வீச்சினால் தமிழர்கள் சாகிறார்கள். சாப்பாடு இல்லாமல் பட்டினி கிடந்து இறக்கிறார்கள். மருந்து இல்லாமல் நோயாளர் இறப்பு வீதம் அதிகரிக்கிறது. போசாக்கின்மையால் தமிழ்க் குழந்தைகள் மரணிக்கின்றன. தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி பலவித தடடுப்பாடுகளால் பாதிக்கப்படுகிறது. தமிழ்ப் பிரதேசங்களில் தொழில்வாய்ப்பும், அபிவிருத்தி வேலைகளும் தடங்கல் கண்டுள்ளன —என்பன போன்ற இன்னோரன்ன கஷ்டங்கள் குறித்து தென்னிலங்கைத் தலைவர்கள் கருத்தில் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது எப்படி?

தெற்கில் இரத்தக் களரி ஏற்பட்டால் கூட, நகரம் எரியும்போது பிடில் வாசிக்கும் அந்த நீரோ மன்னர்கள் தமது பதவி ஆசை மயக்கம் தெளிந்து அதனைக் கண்டு கொள்வார்களா என்பதே சந்தேகம்!

இதன் மூலம் பெறப்படும் இறுதித் தேற்றம் என்ன? தமிழர் பிரச்சினையைச் சிங்களத் தலைவர்கள் தீர்க்கப் போவதில்லை. தமிழர்களே தீர்வு கண்டாக வேண்டும் என்பது தான்!

---

விற்பனைத் திணைக்கள் பருத்தித்துறை கிளை

## 'அ', 'உ' உணவு அட்டைக்கு பொருள்கள் விநியோகம்

மந்திகை, பெப். 16

யாழ். விற்பனை திணைக்களத்தின் பருத்தித்துறை கிளையினால் 'அ', 'உ' உலர் உணவு அட்டைகளுக்கு அரிசி, மா, சீனி போன்ற பொருள்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த, புதிய 'அ', 'உ' உலர் உணவு அட்டையின் 43ஆம் கட்டத்திற்கும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பழைய 'அ', 'உ' உலர் உணவு அட்டையின் 28ஆம் கட்டத்திற்கும் பொருள்கள் விநியோகம் இடம் பெறுகின்றது.

மேற்குறிப்பிட்ட கட்டங்களுக்கு ப.நோ.கூ சங்கங்களில் பொருள்களைப் பெற்றவர்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்படமாட்டா என்றும் விற்பனைத் திணைக்கள பருத்தித்துறை கிளை முகாமையாளர் தெரிவித்தார். (த-87)

### பாராட்டு

அரியாலை, பெப். 6

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயத்தில் தொடர்ந்து 35 வருடங்கள் சேவையாற்றிய ஸ்ரீ லோகேஸ்வர சர்மாவிற்கு கோவில் நிர்வாக சபையினரால் பாராட்டு விழா ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் இந்துக் குருமார்கள் கலந்து சிறப்பித்தனர். கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம், மாதர் சங்கம் ஆகியவையும், அர்ச்சகரை பாராட்டி கௌரவித்தது. அவருக்கு பொற்கிளியும் வழங்கப்பட்டது. (த-17)

### விநியோகம்

யாழ்ப்பாணம், பெப் 16

யாழ். வர்த்தகத் திணைக்களத்தின் சகல கிளைகளிலும் சர்க்கரை, மைசூர்பருப்பு, லக்ஸ்பிறே பால்மா என்பன உலர் உணவு அட்டைகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்டு வருவதாக வர்த்தகத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மைசூர் பருப்பு கிலோ 65 ரூபாவுக்கும் லக்ஸ்பிறே பக்கெட் ஒன்று 55 ரூபாவுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

60 ஆயிரம் அகதிகளுக்கு

## ஐ.நா. உலக உணவுத் திட்டம் தொடர்ந்தும் உதவும்

கொழும்பு, பெப். 16

நாட்டில் உள்ள 174 நலன்புரி முகாம்களில் வாழும் 60 ஆயிரம் அகதிகளுக்கு உணவு வழங்குவதற்காக சமூக சேவை அமைச்சுக்கு ஐ. நா. உலக உணவுத் திட்டம் தொடர்ந்தும் வழங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசு, தானியம, சீனி ஆகிய பொருள்களை தொடர்ந்து 6 மாதங்களுக்கு வழங்க உலக உணவுத் திட்டம் கடந்த ஆகஸ்டில் இணக்கம் தெரிவித்திருந்தது. அந்தக் கால எல்லை நேற்றுடன் முடிவடைந்தது.

கொழும்பு, புத்தளம், அனுராதபுரம், குருநாகல், மாத்தறை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள இம் முகாம்களில் அப்போது 75 ஆயிரம் அகதிகள் இருந்தனர். [த-எ]

## அ.தி.மு.க. - இ. காங்கிரஸ் கூட்டணி முறிந்துவிட்டது!

அமைச்சர் அரங்கநாயகமும் சொல்கிறார்

சென்னை, பெப். 16

அ. தி. மு. கவுக்கும் - இந்திரா காங்கிரஸுக்கும் இடையேயான கூட்டணி உறவு முறிந்து விட்டது.

அ.தி.மு.க. தலைமை நிலையச் செயலாளரான மாநில அமைச்சர் செ. அரங்கநாயகம் முன்கண்டவாறு திருச்சியில் செய்தியாளர்களிடம் கூறினார்.

கூட்டணி உறவு முறிந்து விட்டது என்று ஆறு அ. தி. மு. க அமைச்சர்கள் கூட்டாக வெளியிட்ட அறிவிப்பை மறுத்து முதலமைச்சர் ஜெயலலிதா எதுவும் கூறவில்லை என்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

உறவு முறிந்த விட்டதை முதலமைச்சரும் அங்கீகரிக்கின்றார் என்பதையே இது எடுத்துக் காட்டுவதாகவும் அவர் கூறினார். தமிழகத்தில் பலமற்றதாக உள்ள பாரதிய ஜனதாக் கட்சியுடன் அ. தி. மு. க. கூட்டணி அமைக்காது என்றும் அவர் சொன்னார்.

எமது தாயகம் மீட்கப்படும்போது

## ஆற்றல் பெற்ற இனமாக தமிழ் சமூகம் திகழவேண்டும்

யாழ்ற்ரன் கல்லூரி திறப்பு விழாவில் உரை

எமது தாயகம் மீட்கப்படும்போது சகல துறைகளிலும் ஆற்றல் பெற்ற இனமாக தமிழ் சமூகம் திகழ வேண்டும். அதற்காக மாணவர்களை பல்வேறு திறன் ஆற்றல் உள்ளவர்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களையே சாரும்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியை வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டத்தில் ஆரம்பித்து வைக்கும் விழாவில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. சி. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ந. பரமசிவம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தனது உரையில் கூறியதாவது:

காரைநகர் மாணவர்கள் இடம்பெயர்ந்த நிலையிலும் கூட தமது கல்வியைக் கைவிடாது தொடர்வது மகிழ்ச்சிக்குரியது. கல்லூரியின் வளர்ச்சிக்கு அனைவரும் இன்றுபோல் என்றும் உழைக்க வேண்டும் என்றார்.

கல்லூரி மண்டபத்தையும் அவர் திறந்து வைத்தார். கல்லூரியின் பெயர்ப்பலகையை பிரதிக் கல்விப்பணிப்பாளர் [விஞ்ஞானம்] திரு. வி. சுந்தரலிங்கம் திரை நீக்கம் செய்தார்.

தீவுப்பகுதியில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளினால் காரைநகர் யாழ்ற்ரன் முன்னர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. தற்போது அடைக்கலத்தோட்டம் கல்யாண மண்டபத்தில் இப் பாடசாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (த-15)

## இன்று

வலிகாமம் வடக்கில் உள்ள பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத, சித்த, யுனானி மற்றும் பாரம்பரிய வைத்தியர்களின் கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழையில் உள்ள வலி வடக்கு பிரதேச சபைப் பணிமனையில் நடைபெறும் என்று பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா அறிவித்துள்ளார்.

o o o

யாழ்ப்பாணம், பெப் 16

ஏழாலை வசந்த நாகபூசணி அம்மன் அவதார நாயகியின் 33 ஆவது பிறந்த தினம் இன்று களவாவோடை வசந்தபுரப் பகுதியில் கொண்டாடப்படும்.

பிறந்த நாள் விழா காலை 7 மணிக்கு வசந்த நாகபூசணி அம்மனுக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். பின்னர் சொற்பொழிவு, ஆய்வுரை ஆகியன இடம்பெறும். தொடர்ந்து ஆலயச் சிறார்களுக்கும் முதியோருக்கும் அன்பளிப்பு வழங்கும் நிகழ்வும் நண்பகல் 12 மணிக்கு அம்மன் வீதி உலாவும் அன்னதானமும் இடம்பெறும்.

மாலை 3 மணிக்கு கி சாந்தன் குழுவினரின் பத்திப் பாடல்கள் இடம்பெறும்.

o o o

யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டின் கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இரண்டு நாடகங்கள் நடைபெறவுள்ளன.

யாழ் பல்கலைக் கழக ஊழியர்கள் பங்கேற்கும் குழந்தை ம சண்முகலிங்கத்தின் ''உறவுகள்'' என்னும் நாடகமும், அதைத் தொடர்ந்து பல்கலைக் கழக மாணவர்கள் பங்கேற்கும் ஷோகச்சந்திரனின் ''இவர்களும் நேசித்தவர்கள்'' என்ற நாடகமுமே இன்று மேடையேற்றப்படவுள்ளன. (உ- -87)

### உற்சவம்

நந்தாவில் முன்னீஸ்வரர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி அடுத்த மாதம் 16 ஆம் திகதி பூர்த்தியாகும். (க-68)

## அன்னை பூபதி பொது அறிவு தேர்வு

தமிழீழத்தில் அன்னைபூபதி நினைவுதின பொது அறிவு தேர்வு ஒன்றை பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்த விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்குகள் செய்து வருகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே 7ஆம் ஆண்டுமுதல் 11ஆம் ஆண்டு வரையான மாணவர்களுக்கும், ஜி. சி. ஈ. உயர்தர மாணவர்களுக்கு தனியாகவும் கட்டுரை, பொது அறிவுப் போட்டிகள் நடத்தப்படும்.

தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களை பெறுவோருக்கு தங்கப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும். போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்றாகும். (த-152)

### ஆயரின் விஜயம்

யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை நேற்று அரியாலை பங்கிற்கு விஜயம் செய்தார்.

அரியாலைப் பங்கின் நிலைமைகளை நேரில் கண்டறிந்த ஆயர் அங்குள்ள அகதி முகாம்களுக்கும் சென்று பார்வையிட்டார். தீவுப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாடும் மக்களின் கஷ்டங்களை அவர் கேட்டறிந்தார். சென். யூட் முகாம், நாவலடி முகாம், சாம்சன் முகாம் ஆகியவற்றுக்கும் ஆயர் விஜயம் செய்தார்.

அரியாலை பங்குத் தந்தை வண. ரூபன் மரியாம்பிள்ளையும், ஆயரின் செயலாளர் வண. தவராஜசிங்கமும் ஆயருடன் சென்றனர். [அ]

### உதைபந்தாட்டம்

யாழ். வட்ட லியோ கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு சென். நீக்கிலாஸ் அணியை எதிர்த்து சென். றோக் அணி மோதும். இந்த ஆட்டம் யாழ் கண்டி வீதி, செம்மணியில் உள்ள அரியாலை ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (உ)

இலக்கிய வளர்ச்சி மன்றங்கள்

## தமிழர் தொன்மை ஆய்விலும் கவனம் செலுத்த வேண்டும்

மூதறிஞர் குலரத்தினம் உரை

''தமிழ் மொழியினதும், இலக்கியத்தினதும் வளர்ச்சிக்காகப் பாடுபடும் மன்றங்கள் தமிழரின் தொன்மை நிகழ்வுகள் குறித்த ஆய்வுகளிலும் கவனம் செலுத்த வேண்டும்''.

யாழ். இலக்கிய வட்டத்தின் 26 ஆவது ஆண்டு நிறைவு விழாவிலும் இலக்கியப் பேரவை 1989 – 1990 ஆண்டுகளின் சிறந்த நூல்களைத் தெரிவு செய்தவற்றுக்குப் பரிசளிக்கும் வைபவத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய மூதறிஞர் க. சி. குலரத்தினம் இவ்வாறு கூறினார்.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது;

''தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இந்த மண்ணின் பணி இன்று நேற்றுத் தொடங்கியதல்ல. இரண்டாவது தமிழ்ச் சங்கம் இருந்த கபாடபுரம் தான் இலங்கை என்று கூற இடம் உள்ளது. இது குறித்து விரிவான ஆய்வுகள் தேவை'' என்று கூறினார்.

பரிசளிப்பு உரை நிகழ்த்திய யாழ். மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் பேசும் போது கூறியதாவது;

''சுதந்திரமாக எழுதினால் என்ன நிகழுமோ என்ற மன விரக்தி ஒரு புறமும் நான் எழுதினால் உலகம் ஏற்குமோ என்ற ஐயப்பாடும் இளம் எழுத்தாளர்களிடையே உள்ளது. இந் நிலை மாற வேண்டும் தாங்கொணாத் துயரில் உள்ள மக்களுக்கு அவர்களின் துயரைக் களையும் ஒளியாக இலக்கியம் அமைய வேண்டும்'', என்றும் கூறினார்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் பேசும் போது கூறியதாவது'';

சமூகத்தையும் மக்களின் வாழ்க்கையையும் செப்பனிட உதவும் பணி இலக்கிய கருத்தாக்கருக்கு உண்டு. எழுத்தில் வடிப்பதற்கும் மனதின் நினைவுகளுக்கும் இடைவெளி இல்லாதவாறு வாழும் மனப்பக்குவம் கொண்ட படைப்பாளியின் ஆக்கங்களினூடாக அவனும் சமூகமும் உயரும்'' என்றார்.

நிகழ்ச்சியில் மூத்த எழுத்தாளர் திரு. ச. வரதருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. 1989-1990ஆம் ஆண்டிற்கான சிறந்த நூல்கள் எனத் தெரிவு செய்யப்பட்ட எட்டு நூல்களுக்கு பரிசும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மேலும் எட்டு நூல்கள் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டன.

திரு வரதர், திரு குலரத்தினம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர்

திருவாளர்கள் க. சொக்கலிங்கம், சே. சிவராஜா, கல்வயல் குமாரசாமி, அனுவை. நாகராஜன், கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் ஆகியோரும் பேசினார்கள். (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்தர் வேலுப்பிள்ளை

அல்வாய் வடக்கைச் சேர்ந்த முத்தர் வேலுப்பிள்ளை 13-02-1993 சனிக்கிழமை காலமாகிவிட்டார். இவர் திரு வே சிவரத்தினம் (உரிமையாளர்- திஸ்ஸ ஸ்ரோர்ஸ், வெள்ளவாயா) அவர்களின் தகப்பனாவார்.

தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
T. விசுவலிங்கம்.
(மருமகன்)

அல்வாய் வடக்கு,
அல்வாய்.
(24462)

## செல்லப்பா பஞ்சரத்தினம்

உரும்பராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பஞ்சரத்தினம் 12-02-93 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நவரத்தினம், காலஞ்சென்ற கண்மணி ஆகியோரின் சகோதரரும், மோகனராஜா, சிறிநாதன் (பிரான்ஸ்), பத்மநாதன் (பிரான்ஸ்), ரகுநாதன் (கனடா), சாந்தினிதேவி, வாசினி (கனடா), சுபாஷினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி, தர்மவனிதா (பிரான்ஸ்), மஞ்சுளா (பிரான்ஸ்) செந்தில்நாதன் (ஆசிரியர், உரும்பிராய் இந்துக்கல்லூரி), ஜீவராஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி நவரத்தினம், சின்னையா, திருமதி சுப்பிரமணியம், திருமதி சின்னராசா, துரைவீரசிங்கம், சண்முகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சிந்தூரி, ரமீதன், திவ்யா, சோபிசன், இந்துசன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-02-93 அன்று கோண்டாவில் இந்து மயானத்தில் மாலை 4-00 மணிக்கு நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. மோகனராஜா.
(மகன்)

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(24461)

## பொன்னர் யோசவ் அல்பேட்

(புனித சூசையப்பர் கத்தோலிக்க அச்சக முன்னைநாள் லிகிதர்)

யாழ்ப்பாணம் 19/13, அடப்பன் வீதி, கொன்வென்ற் தெற்கைச் சேர்ந்த பொன்னர் யோசவ் அல்பேட் 15-02-1993இல் காலமானார்

இவர் காலஞ்சென்ற மதலேனாவின் (முன்னாள் ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், கிறிஸ்தோபர் — பூரணத்தின் (இளைப்பாறிய ஆசிரியை அன்புச் சகோதரரும் கத்தரீன், செல்வராணி, அனா புஸ்பராணி அல்பேட் (முகாமையாளர், மக்கள் வங்கி, காங்கேசன்துறை), றோசா சுகிர்தராணி, மனோன்மணி (ஆசிரியை பம்பலப்பிட்டி - இந்துக்கல்லூரி), அ ம அல்பேட் (லண்டன்), தேவமணி (தேவி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும்; என். சவுந்தரராஜா ஆசிரியர்), கே. சிவசுப்பிரமணியம் (ஆசிரியர்), சுபோதினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுஜிதரன், டிலீப், றொமேஸ், தனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகளின் பின் நல்லுடல் அவரின் இல்லத்தில் இருந்து இன்று (16-02-1993) செவ்வாய்க்கிழமை மாலை 4-00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
செல்வி A. P. அல்பேட்,
(முகாமையாளர், மக்கள் வங்கி,
காங்கேசன்துறை)

கொன்வென்ற் தெற்கு,
யாழ்ப்பாணம்.
(24470)

## சடையர் சரவணமுத்து

குடமியன் வரணியைச் சேர்ந்த சடையர் சரவணமுத்து அவர்கள் நேற்றுக் காலமானார். இவர் தையல்முத்துவின் அன்புக் கணவரும், யோகராசா (இலங்கை வங்கி, கிளிநொச்சி), திருமதி யோகேஸ்வரி கணேசபிள்ளை (ஆசிரிய ஆலோசகர் - கணிதம்), திருமதி இராஜேஸ்வரி திருஞானசிவம் (ஆசிரியை, கைதடி முத்துக்குமாரசாமி ம. வி.), செல்வி மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற க. கணேசபிள்ளை மற்றும் திருமதி யோ. சரஸ்வதி, திரு. சி. திருஞானசிவம் (சிதம்பரன் சயிக்கில் வேக்ஸ் - கைதடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி மதுராந்தகி இரவீந்திரன், க மணிமாறன் (லண்டன்), க. மணிமயூரன், க. மணிமாலவன் (வரணி ம. வி மாணவர்கள்), யோ செழியன், யோ. பவானி, யோ. செந்தூரன். யோ சேந்தன், தி. அர்ச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வன் இரவீந்திரன் சஜீவனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-02-93) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பூதவுடல் வேவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சி. திருஞானசிவம்
(மருமகன்)

குடமியன்,
வரணி. (24473)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-02-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

### சர்வதேச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது

பிரசார நடவடிக்கைகளை நேரில் கவனிப்பதற்காக எதிர்க்கட்சியின் உயர்மட்டப் பிரமுகர்களைக் கொண்ட ஒரு குழுவும் தெரிவு செய்யப்பட்டது. [உ]

### புலிகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றி வளைத்ததும்—

இந்தியாவின் வல்லாதிக்கப் போக்குக்குக் கட்டுப்பட மறுத்த கேணல் கிட்டுவும், ஒன்பது போராளிகளும் தமது கப்பலைத் தகர்த்து வீரமரணம் அடைந்ததும் தெரிந்தவையே.

அதேபோன்ற போக்கை இந்தியா தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு நாளிதழ் ஒன்று இது குறித்து வெளியிட்ட செய்தியில்—

இலங்கையும் இந்தியாவும் கடல் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் மீது மும்முனைத் தாக்குதலை நடத்துவதாகவும்—

வேகமாகச் செல்கின்ற பீரங்கிப் படகுகள் இந்தியக் கரையோரக் கப்பல்களுடன் இணைந்து 24 மணி நேரமும் ரோந்து புரிகின்றன என்றும்—

அரபுக்கடலில் இருந்து அந்தமான் — நிக்கோபர் தீவுகள் உள்ளிட்ட கடல் பகுதியில் இந்தியக் கப்பல்கள் நடமாடுகின்றன என்றும்—

இதனால் விடுதலைப் புலிகள் பயன்படுத்துகின்ற கப்பல்கள் சர்வதேச நீர்ப்பரப்பில் வருகின்றபோது கண்டுபிடிக்கக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### அற்புதமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

மனதின் ஆழத்து உள்ளுணர்வுகளை வார்த்தைகளிற் சித்தரிப்பது கடினம். அதுவும் ஆன்மாவை உலுப்பிவிடும் ஓர் உணர்வுப் பூகம்பத்தை மனித மொழியில் விவரிக்க முடியாது எனது அன்புத் தம்பி கிட்டுவின் இழப்பும் இப்படித்தான். அவனது மறைவு எனது ஆன்மாவைப் பிழிந்த ஒரு சோக நிகழ்வு. அதனைச் சொற்களால் வார்த்துவிட முடியாது.

நான் கிட்டுவை ஆழமாக நேசித்தேன். தம்பியாக, தளபதியாக, எனது சுமைகளைத் தாங்கும் இலட்சியத் தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட்சியப் பற்றுணர்வில், ஒன்றித்த போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்து கொண்ட அனுபவத்தில் ஒருவரை ஒருவர் ஆழமாக இனம் கண்ட புரிந்துணர்வில், வேரூன்றி வளர்ந்த நேயம் அது.

அவனுள் ஓர் அபூர்வம் இருந்ததை நான் ஆரம்பத்திலிருந்தே கண்டு கொண்டேன். அது அவனது அழகான ஆளுமையாக வளர்ந்தது. ஒரு சுதந்திர வீரனுக்குரிய அனைத்து சிறப்பியல்புகளும் அவனிடமிருந்தன. அதனால் அவன் ஓர் அற்புதமான இலட்சியவாதியாக வாழ்ந்தான்; போராடினான்; அனைத்து மக்களது இதயங்களையும் கவர்ந்தான்; போர்க்களத்தில் வீரனாகவும், பொதுமக்களின் தோழனாகவும், எங்கும் எல்லாவற்றிலும் எல்லோரிடமும் அவனது ஆளுமையின் வீச்சு நிறைந்திருந்தது

கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு.

வங்கக் கடலில் பூகம்பமாக அவனது ஆன்மா பிளந்தது. அதன் அதிர்வலையால் எமது தேசமே விழித்துக் கொண்டது.

கிட்டு, நீ சாகவில்லை.

ஒரு புதிய மூச்சாகப் பிறந்திருக்கிறாய்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சென்னையில் நடந்த

# இரண்டாவது டெஸ்டிலும் இந்திய அணி வென்றது

சென்னை, பெப். 16

நேற்று சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் விளையாட்டரங்கில் முடிவடைந்த இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 22 ஓட்டங்களினால் இங்கிலாந்து அணியை வென்றது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் நடைபெற்று முடிந்த முதல் இரண்டு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றதன் மூலம் தொடரில் இந்தியா வாகை சூடியுள்ளது.

நேற்று முடிவடைந்த 2ஆவது டெஸ்ட் போட்டியின் ஓட்ட விவரம் வருமாறு:-

இந்தியா:-, 6 விக்கெட் இழப்புக்கு 560 ஓட்டங்கள்

★ இங்கிலாந்து:- 286 ஓட்டங்கள், 252 ஓட்டங்கள். (உ-6)

# உருளைக்கிழங்கு இம்முறை சிறப்பான விளைச்சல்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணத்தில் இம்முறை உருளைக்கிழங்கு குறிப்பிடத்தக்க அளவு விளைச்சல் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்பார்த்ததை விட அதிகளவு விளைச்சலை விவசாயிகள் பெற்றிருப்பதை விவசாயத் திணைக்கள யாழ். மாவட்ட அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தினார்.

சுன்னாகம், மருதனார் மடம், உடுவில், ஊரெழு போன்ற பகுதிகளிலேயே உருளைக்கிழங்கு இம்முறை அதிகளவு விளைந்திருக்கிறது.

தற்போது யாழ்ப்பாணத்தில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு ஐம்பது ரூபாவாக விற்பனையாவதாகவும்—

கொழும்பிலும் இந்த விலையிலேயே உருளைக் கிழங்கு விற்கப்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கிடையில்—

மருதனார்மடம், ஊரெழு, உடுவில் பகுதிகளில் தோட்டங்களில் விளைந்திருக்கும் உருளைக் கிழங்கு இரவோடு இரவாகக் களவாடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-17)

### பாடசாலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசு அதிக நிதியை ஒதுக்கீடு செய்வதைத் தவிர்த்து, கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்க வேண்டும் என்று உலக வங்கி நிபந்தனை விதித்திருப்பதாகவும் —

இதன் அடிப்படையில் பாடசாலைகள் தமக்குத் தேவையான நிதியை — அரசிடமிருந்து எதிர்பார்க்காமல் — தாங்களே திரட்டக் கூடியதான அமைப்புகளாக பாடசாலை அபிவிருத்திச் சபைகளை ஸ்தாபிக்க அரசு திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (உ-6)

### சர்வோதய .

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

8,000 மாணவர்களும், இவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் பாதிக்கப்படுவார்கள்.

எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதியுடன் வட கிழக்கில் சர்வோதய நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதாக வெளிவந்த செய்திகள் குறித்தே திரு. சிவசுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

ஆனால் இது தொடர்பான தகவல் எதுவும் தமக்குத் தலைமையகத்திலிருந்து கிடைக்கவில்லை எனவும் அவர் கூறினார். (க-162)

### தமிழகத்தில்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு நிலைமை சீரழிந்து வருவதாகவும்—

ஊழல் மலிந்து வருவதாகவும் குறிப்பிட்ட திரு. மொஹித்சென், இவற்றைக் கட்டுப்படுத்த தமிழக அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

காங்கிரஸ், அ தி.மு.க மற்றும் அகில இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி, ஆகியவற்றைக் கொண்ட முற்போக்கு முன்னணி இப்போது செயலிழந்து போனமைக்கு முதலமைச்சர் ஜெயலலிதாவின் அணுகு முறையும் நடவடிக்கைகளுமே காரணம் என்றும் குற்றஞ்சாட்டினார்.

பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் துணை அமைப்புகளின் பிடியில் இருந்து அ. தி மு.க. விடுபட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (உ-எ)


கொக்குவில்

## இந்து மயான அபிவிருத்திச் சபை

கொக்குவில் இந்து மயானத்தையோ, பிரேத வண்டிலையோ பயன்படுத்தும் பொதுமக்கள் இனிமேல் தனாதிகாரி திரு செ. சிவபாதம் (பொற்பதிப்பிள்ளையார் கோவிலடி) உடன் தொடர்பு கொண்டு பற்றுச் சீட்டுக்களைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

பொ. யோகலிங்கம், தலைவர்.
சி. மாதவகுமாரன், செயலாளர்.
(6001)


# மரண அறிவித்தல்

## யூலிஸ் (கார்ச் சாரதி)

திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த யூலிஸ் அவர்கள் நேற்றுக் காலமாகிவிட்டார். இவர் மெனிக்காவின் அன்புக் கணவரும், சித்திராதேவி, பத்மாதேவி, பந்துசேனன், ஜெயசேனன் (வெள்ளை), தருமசேனன் (தருமு), கருணதாஸ் (குட்டி), பிரேமிளா, சௌந்தரநாதன் (ரவி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 1·00 மணியளவில் அவரது திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்

தகவல்:
ஜெயசேனன் (வெள்ளை)
(மகன்)
(ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்)

கிராமவிஸ்தரிப்புத் திட்டம்,
திருநெல்வேலி.
(24475)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org